# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

இந்தச் சொற்களஞ்சியத்தின் நோக்கம், தேர்தல் நிர்வாகத் திட்டத்தின் வாசகருக்கு தேர்தல் செயல்முறையின் சூழலை முழுவதுமாக புரிந்துகொள்ள உதவுவதும் மேலும் ஆவணத்தில் பயன்படுத்தப்படும் சில சொற்களை வரையறுப்பதும் ஆகும். சிலசொற்களுடன் தொடர்புடைய நுணுக்கமான தேவைகளை தெளிவுபடுத்திக்கொள்ளவும் புரிந்துகொள்ளவும், தேர்தல் நிர்வாகத்திட்டத்தைப் பார்க்கவும்.

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| 1% கை முறை புள்ளிக்கணக்கீடு | தேர்தல் சான்றளிப்புக்கு முன், வாக்குகளின் மெஷின் எண்ணிக்கையைச் சரிபார்க்க சட்டப்பூர்வமாக தேவைப்படும் வாக்குச்சீட்டுகளின் கைமுறை எண்ணிக்கை. **கேன்வாஸில்** சேர்க்கப்பட்ட பலபடிகளில் ஒன்று. |
| 15-நாள் முன்பு பதிவு மூடல் | ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்பு, வாக்களிக்க பதிவுசெய்ய, கலிஃபோர்னியாவில் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு.<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு §2102)* |
| 8D2 கார்டுகள் | *வாக்காளர் ரெசிடென்சி உறுதிப்படுத்தல் கார்டைப் பார்வையிடுக.* |
| *வராதவர் வாக்குச்சீட்டு* | *காலாவதியான சொல்லியல்.*<br>*அஞ்சல்-மூலம் வாக்களிக்கும் வாக்குச்சீட்டைப் பார்வையிடுக.* |
| அணுகக்கூடிய வாக்குச்சீட்டு | இது ஒரு வாக்குசீட்டு, பொதுவாக மின்னணு வாக்குச்சீட்டு, இதில் போட்டியிடும் வேட்பாளர்கள் தோன்றும் மற்றும் குறைபாடுள்ளவர்கள் பயன்படுத்துவதற்கென திரையில் வடிவமைக்கப்பட்ட பகுதியைத் தொடுவதன் மூலம் அல்லது ஆடியோ கேட்கும் சாதனம் மற்றும் பிரெய்லி டச் பேட் அல்லது சிப் அன்ட் பஃப் போன்ற உதவும் சாதனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அதில் தோன்றும் வாக்களிக்கும் நடவடிக்கைகளை அவர்களால் அணுக முடியும்.குறைபாடுள்ளவர்க<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு §19240)* |
| முகவரி திருத்தும் சேவை(ACS) | அமெரிக்க அஞ்சல் சேவை மூலம் வழங்கப்பட்ட தரவு, இதனைக் கவுண்ட்டி தேர்தல் அதிகாரி இந்தத் தகவல்களை வாக்காளர் பதிவு ப்பதிவேடுகள்மற்றும் அஞ்சல் ரெசிடென்சி உறுதிப்படுத்தல் கார்டுகளை நிர்வகிக்கவும் புதுப்பிக்கவும் பயன்படுத்தலாம்.<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு §2033)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
| --- | --- |
| செயலிலுள்ள வாக்காளர் | (1) தகவல் புதுப்பித்த நிலையில் இருக்கும், (2) வாக்களிப்பு ஆவணங்களைப் பெறமுடியும், மற்றும் (3) மிக சமீபத்தில் வாக்களித்த அல்லது முகவரி ரெசிடென்சி உறுதிப்படுத்தல் அஞ்சல் மூலம் முகவரி உறுதிப்படுத்தப்பட்டுள்ள வாக்காளர். செயலில் உள்ள வாக்காளருக்கு சட்டப்பூர்வமாக வாக்களிக்கும் மற்றும் மனுவில் கையெழுத்திடும் உரிமை உண்டு.<br>(கலி.ஃபோர்னியா *தேர்தல் குறியீடு* *§§2220 - 2227)* |
| பதிவுக்கான பிரமாணபத்திரம் | வாக்காளர் பதிவுப் படிவம், வாக்காளர் பதிவு அட்டை, வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பம், அல்லது வாக்காளர் பதிவு விண்ணப்பம் என்றும் அழைக்கப்படுகிறது.<br>பதிவுசெய்யப்பட்ட வாக்காளராக விரும்பும் ஒவ்வொரு நபரும் இந்தப் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும் (உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை வழங்கி தாக்கல் செய்திருந்தாலே தவிர). ஒழுங்காக செயல்படுத்தப்பட்ட பிரமாணப்பத்திரம் பயனுள்ளதாக கருதப்பட, அதை தேர்தல் நாளுக்கு முன்புள்ள 15வது நாளுக்குள் அல்லது அதற்கும் முன்பு, மற்றும் பிற குறிப்பிட்ட மற்றும் சரியான நேரத்துக்கான நிபந்தனைகளின் கீழ் கவுண்ட்டி தேர்தல் அதிகாரி பெற்றிருக்க வேண்டும். ஒரு வாக்காளர் இடமாறிய போதெல்லாம், முறையாக பதிவுசெய்யப்பட அந்த வாக்காளர் ஒரு புதிய பதிவு பிரமாணப்பத்திரம் அல்லது மாற்றத்தின் அறிவிப்பை செயல்படுத்த வேண்டும்.<br>(*கலி.ஃபோர்னியா தேர்தல் குறியீடு §§2100 - 2194.1)* |
| வாக்குச்சீட்டுகள் அனைத்தும்-அஞ்சலில் பதிவாகும் தேர்தல் | முழுவதுமாக அஞ்சல் மூலம் நடத்தப்படுகின்ற ஓர் உள்ளூர், சிறப்பு அல்லது ஒருங்கிணைந்த தேர்தல்\ (சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ்).<br>(*கலி.ஃபோர்னியா தேர்தல் குறியீடு பிரிவு 4)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| மாற்று ரெசிடென்சி உறுதிப்படுத்தல் (ARC) | நான்கு ஆண்டுகளில் வாக்களிக்காத அல்லது தங்கள் முகவரியை மாற்றாத பட்டியலில் பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு வாக்காளருக்கும் கவுண்ட்டி தேர்தல் அதிகாரி *அனுப்பக்கூடிய* அஞ்சலட்டையை அனுப்ப தேவைப்படும் ஒரு நடைமுறை; மேலும், அஞ்சலட்டைக்கு வாக்காளர் பதிலளித்து, அவர் "செயலிலுள்ள" வாக்காளராக இருக்க விரும்புவதை சுட்டிக்காட்ட வேண்டும். (*கலி:ஃபோர்னியா தேர்தல் குறியீடு §2220)* |
| குறைபாடுள்ளவர்ககுறைபாடுள்ள அமெரிக்கர்கள் சட்டம்(ADA) | குறைபாடுள்ள அமெரிக்கர்கள் சட்டம் (ADA) 1990 இல் சட்டமாக மாறியது. ADA என்பது ஒரு சிவில் உரிமைகள் சட்டமாகும், இது வேலைகள், பள்ளிகள், போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு திறந்திருக்கும் அனைத்துப் பொது மற்றும் தனியார் இடங்கள் உட்பட பொதுவாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் குறைபாடுள்ளவர்களுக்கு எதிரான பாகுபாட்டைத் தடைசெய்கிறது. குறைபாடுள்ளவர்களுக்கும் எல்லோருக்கும் உள்ளதை போலவே அதே உரிமைகளும் வாய்ப்புகளும் கிடைப்பதை உறுதி செய்வதே இந்தச் சட்டத்தின் நோக்கம். இனம், நிறம், பாலினம், தேசிய தோற்றம், வயது மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையில் தனிநபர்களுக்கு வழங்கப்படுவதை போலவே குறைபாடுள்ளவர்களுக்கும் சிவில் உரிமைகளுக்கான பாதுகாப்பை ADA வழங்குகிறது. பொது தங்குமிடங்கள், வேலைவாய்ப்பு, போக்குவரத்து, மாநில மற்றும் உள்ளூர் அரசாங்க சேவைகள் மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றில் குறைபாடுள்ளவர்களுக்கு இது சமவாய்ப்பு கிடைப்பதை உறுதிசெய்கிறது.<br>*தொலைநிலையாக அணுகக்கூடிய அஞ்சல்-மூலம் வாக்குப்பதிவு(RAVBM) -ஐப் பார்வையிடுக.* |
| வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பம் | *பதிவுக்கான பிரமாணப்பத்திரத்தைப் பார்வையிடுக.* |
| ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி | ஒரு வாக்காளர் வந்து, அவருக்கு வாக்களிக்க உரிமை உள்ள அனைத்து போட்டிகளையும் உள்ளடக்கிய வாக்குச்சீட்டைப் பெற்று, வாக்களிக்க கூடிய ஒர்ஒற்றை இடம். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடியில், வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத தகுதியற்ற போட்டிகள், வாக்குச்சீட்டில் இருக்காது. ஒரே தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்கென இடங்கள் குறிப்பாக அமைக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட வாக்களிக்கும் இடம் அமைக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் வாக்குச்சாவடி மாதிரியின் கீழ் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| தானியங்கி மறு எண்ணிக்கை கொள்கை | ஒரு வேட்பாளர் அல்லது ஆர்வமுள்ள வாக்காளர் மீண்டும் எண்ணுவதற்காக பணம் செலுத்தத் தேவையில்லாமல், சில போட்டிகளில் வாக்குச்சீட்டுகளை கைமுறையாக புள்ளிக்கணக்கிடும் செயல்முறை மூலம் குறைந்த அளவு வித்தியாசத்தில் வெற்றிபெறும் உள்ளூர் போட்டிகளின் முடிவுகளை உறுதிப்படுத்த ஒரு செயல்முறையை வழங்க Santa Clara கவுண்ட்டி மேற்பார்வையாளர்கள் வாரியத்தால் பின்பற்றப்படும் ஒரு கொள்கை, . இந்தக் கொள்கையின்படி, Santa Clara கவுண்ட்டியில் (மாநில மற்றும் கூட்டாட்சி அலுவலகங்களைத் தவிர்த்து) வெற்றி வித்தியாசத்தின் அளவு வாக்களிக்கப்பட்ட வாக்குகளில் 0.25 சதவீதத்திற்கு குறைவாகவோ அல்லது 25 வாக்குகளுக்குக் குறைவாகவோ உள்ள அனைத்துப் போட்டிகளிலும் கைமுறை மறு எண்ணிக்கை செய்யப்பட வேண்டும், இதில் San José கவுண்ட்டி முழுவதும் அல்லது நகரம் முழுவதும் நடக்கும் போட்டிகளில் மட்டும் மெஷின் மூலம் மறு எண்ணிக்கை செய்யப்படும். இந்தக் கொள்கைக்கு புள்ளிக்கணக்கீடு நடத்தப்பட வேண்டும்.<br>*(Santa Clara கவுண்ட்டி மேற்பார்வையாளர்கள் வாரியத்தின்வாரியத்திகொள்கை கையேடு பிரிவு 3.63)* |
| வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் | வாக்காளர் பதிவாளர் / மாவட்ட தேர்தல் அதிகாரியால் நிறுவப்பட்ட ஒரு பாதுகாப்பான கொள்கலம், இங்கே வாக்களிக்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டை திருப்பி அனுப்பலாம். |
| வாக்குச்சீட்டு டிராப்-ஆஃப் இடம் (BDL) | வாக்காளர் பதிவாளரால் அமைக்கப்பட்ட இடம், இந்த இடத்தின் உள்ளே அல்லது வெளியே பாதுகாப்பான அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் அமைந்திருக்கும். |
| அணுகக்கூடிய வடிவமைப்பில் வாக்குச்சீட்டு | *அணுகக்கூடிய வாக்குச்சீட்டைப் பார்வையிடுக.* |
| வாக்குச்சீட்டைக் குறிக்கும் சாதனம் (BMD) | வாக்குச்சீட்டைக் குறிக்க வாக்காளருக்கு உதவும் சாதனம். சாதனம் எந்த அளவிலும், உருவத்திலும் அல்லது வடிவத்திலும் இருக்கலாம், மேலும் வாக்குச்சீட்டில் செய்யப்படும் முத்திரை வாக்காளரின் தேர்வை தெளிவாகக் குறிக்க வேண்டும்.<br>(கலிஃபோர்னியா *தேர்தல் குறியீடு §14270)* |
| தேவைப்படும் போது வாக்குச்சீட்டு (BOD) | வாக்குச்சீட்டுகளை அச்சடித்து, அதை அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு அட்டை இருப்பில் வைத்து, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு அதை வாக்களிக்கும் பொருட்டு வழங்க கவுண்ட்டி மாவட்ட தேர்தல் அதிகாரியை அனுமதிக்கும் ஒரு சான்றளிக்கப்பட்ட தன்னிறைவான அமைப்பு. இந்த அமைப்பு தேர்தலுக்காக முன்கூட்டியே, தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டுகளுக்கு கூடுதலானவை.<br>(கலிஃபோர்னியா *தேர்தல் குறியீடு §13004.5)* |
| மேற்பார்வையாளர்களின் வாரியம்(BOS) | Santa Clara கவுண்ட்டி அரசாங்க நிர்வாகங்களின் செயல்பாட்டை மேற்பார்வையிடும் நிர்வாகக் குழு. |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| Cal-Access | மாநில வேட்பாளர்கள், நன்கொடையாளர்கள், பரப்புரையாளர்கள் மற்றும் பலர் வழங்கிய நிதித் தகவல்களைப் பெறுவதற்கும் அணுகுவதற்கும், மாநிலச் சட்டத்தின்படி, மாநில செயலாளரால் உருவாக்கப்பட்ட ஓர் ஆன்லைன் அமைப்பு. ஜனவரி 1, 2000 முதல் $25,000 திரட்டிய அல்லது செலவழித்த பிரச்சார நிறுவனங்கள், ஆன்லைன் அல்லது மின்னணு முறையில் தாக்கல்செய்ய வேண்டும். எந்தவொரு வகை அறிக்கையிடத்தக்க கொடுப்பனவுகள், செலவுகள், பங்களிப்புகள், பரிசுகள் அல்லது பிற பொருட்களின் மொத்த தொகை ஒரு காலண்டர் காலாண்டில், $2,500 அல்லது அதற்கு மேற்பட்டதானவுடன், அதை பரப்புரை நிறுவனங்கள் ஆன்லைனில் அல்லது மின்னணு முறையில் தாக்கல்செய்ய வேண்டும்.<br>(கலிஃபோர்னியா *அரசு குறியீடு* §§84602 & 84605) |
| Cal-Online | கலிஃபோர்னியாவின் அரசியல் சீர்திருத்தச் சட்டத்தால் கட்டாயமாக்கப்பட்ட மாநில வெளிப்படுத்தல் அறிக்கைகள்/ரிபோர்ட்டுகளை ஆன்லைனில் மாநில செயலாளரிடம் கட்டணமின்றி தாக்கல்செய்ய அனுமதிக்கும் மாநில செயலாளரின் இணைய தளத்தில் உள்ள வலை - அடிப்படையிலான தரவு உள்ளீட்டு அமைப்பு. இந்த இலவச பயன்பாட்டைப் பயன்படுத்த தாக்கல்செய்பவர் சரியான அடையாள எண் மற்றும் கடவுச்சொல்லை வைத்திருக்க வேண்டும். இந்தத் தகவல்கள் பின்னர் மாநில செயலாளரின் Cal-Access இணைய தளத்தில் பொதுபார்வைக்காக மீளுருவாக்கம் செய்யப்படுகின்றன.<br>(கலிஃபோர்னியா *அரசு குறியீடு* §84602) |
| கலிஃபோர்னியா ஒழுங்கு முறைகளின் குறியீடு | கலிஃபோர்னியா மாநில செயலாளர், மாநில தேர்தல் சட்டத்தின் சீரான பயன்பாடு மற்றும் நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குமுறைகளை குறியீடாக்கும் சட்ட ஆவணம். |
| கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு | கலிஃபோர்னியாவில் தேர்தல்களின் நிர்வாகத்தை நிர்வகிக்கும் சட்டம். |
| கலிஃபோர்னியா அரசு குறியீடு | கலிஃபோர்னியா முழுவதும் அரசாங்க நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம். |
| ரத்துசெய்யப்பட்ட வாக்காளர் | பின்வரும் செயல்களுக்குப் பிறகு வாக்காளர் தரவுத்தளத்தில் உள்ள ஒரு வாக்காளர் ரத்துசெய்யப்படலாம்:<br>1. முகவரி உறுதிப்படுத்தல் அஞ்சலுக்கு பதிலளிக்காதது<br>2. தொடர்ச்சியாக இரண்டு ஜனாதிபதித் தேர்தல் சுழற்சிகளில் வாக்குப் பதிவு இல்லாதது<br>3. இறப்பால்<br>4. வாக்காளரின் சொந்த கோரிக்கையால்<br>வாக்காளர் பட்டியலில் அல்லது தேர்தல் அதிகாரி தயாரித்த எந்தவொரு பட்டியலிலும் வாக்காளர் இருக்கமாட்டார், மேலும் எந்தவொரு வாக்களிப்புப் பொருட்களையும் பெற மாட்டார். ரத்துசெய்யப்பட்ட வாக்காளர் ஒரு புதிய வாக்காளர் பதிவு விண்ணப்பத்தை முடித்தவுடன் வாக்களிக்க தகுதிபெறுவார். ரத்துசெய்யப்பட்ட வாக்காளருக்கு மனுவில் கையெழுத்திட தகுதியில்லை.<br>(கலிஃபோர்னியா *தேர்தல் குறியீடு* §2183) |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| வேட்பாளர் | பின்வரும் சூழ்நிலைகளில் ஒரு தனிநபர் வேட்பாளராகிறார்:<br>1. தனிநபரின் பெயர் முதன்மை, பொது, சிறப்பு அல்லது மறுஅழைப்பு தேர்தல் வாக்குச்சீட்டில் பட்டியலிடப்பட்டுள்ளது; அல்லது<br>2. எந்தவொரு மாநில அல்லது உள்ளூர் தேர்வு அலுவலகத்திலும் நியமிக்கப்பட அல்லது தேர்தலில் நிற்க தேர்தல் அதிகாரிகள் அவரது சார்பாக வாக்குகளை எழுதி எண்ணவைக்கதனிநபர் தகுதி பெற்றுள்ளார்; அல்லது<br>3. எந்தவொரு மாநில அல்லது உள்ளூர் தேர்வு அலுவலகத்திலும் நியமிக்கப்பட அல்லது தேர்தலில் நிற்க தனிநபர் ஒரு பங்களிப்பைப் பெறுகிறார் அல்லது செலவு செய்கிறார் (அல்லது பங்களிப்பைப் பெற அல்லது செலவுசெய்ய வேறு எந்த நபருக்கோ ஒப்புதல் அளிக்கிறார்); அல்லது<br>4. தனிநபர் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலக பதவி வகிப்பவர்.<br>கூட்டாட்சி அலுவலகத்திற்காக போட்டியிடும் நபர்கள் அரசியல் சீர்திருத்த சட்டத்தின் கீழ் "வேட்பாளர்கள்" அல்ல.<br>*(கலி:போர்னியா அரசு குறியீடு §§82007 & 84214)* |
| கேன்வாஸ் (அதிகாரப்பூர்வ கேன்வாஸ்) | பெறப்பட்ட அனைத்து வாக்குச்சீட்டுகளையும் (தற்காலிக வாக்குச்சீட்டுகள், அஞ்சல்-மூலம் பெற்ற வாக்குச்சீட்டுகள், மற்றும் நிபந்தனை வாக்காளர் வாக்குச்சீட்டுகள் உட்பட) செயல்முறைப்படுத்துவது மற்றும் புள்ளிக்கணக்கீடு செய்வது, பொருட்களை சமன் செய்து, வாக்குச்சீட்டுகளின் கைமுறை புள்ளிக்கணக்கீடு(சரிபார்ப்பு) நடத்தி, முடிவுகளுக்கு சான்றளித்து மற்றும் தேர்தல் சான்றிதழ்களை வழங்குவதற்காக மாவட்ட தேர்தல் அதிகாரிக்குள்ள சட்டரீதியான காலக்கெடு (பொதுவாக தேர்தல் தேதிக்கு அடுத்தநாள் தொடங்கி 30 நாள் அவகாசம்),<br>*(கலி:போர்னியா தேர்தல் குறியீடு பிரிவு 15)* |
| சமூக அடிப்படையிலான நிறுவனங்கள்(CBOகள்) | வாக்காளர் பதிவாளர் (ROV), சமூக அடிப்படையிலான அமைப்புகளுடன் (CBOகள்) வாக்காளர் பதிவை அதிகரிக்கவும், புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களை வாக்களிக்க ஊக்குவித்துஜனநாயகத்தில் பங்கேற்க ஈடுபடுகிறார். |
| நிபந்தனை வாக்காளர் பதிவு | ஒழுங்காக செயல்படுத்தப்பட்ட பதிவு பிரமாணப்பத்திரம் தேர்தல் தேதியன்று அல்லது அந்த நாளுக்கு முன்புள்ள 14 நாள் அவகாசத்தில் கவுண்ட்டி தேர்தல் அதிகாரியிடம் பதிவு செய்தவர் மூலம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் மேலும் இது தேர்தல் அதிகாரி பிரமாணப்பத்திரத்தை செயல்படுத்திய பின்னும் பயனுள்ளதாகக் கருதப்பட்டால், இது பதிவுசெய்தவரின் பதிவுக்கான தகுதியை தீர்மானிக்கிறது, மற்றும் பதிவுசெய்தவரின் தகவலை கேன்வாஸ் காலத்திற்கு முன், அல்லது அதன்போது சரிபார்க்கிறது. வாக்காளர் ஒரு நிபந்தனை வாக்காளர் பதிவு படிவத்தை பூர்த்திசெய்து ஒரு தற்காலிக வாக்குச்சீட்டை போடலாம்.<br>*(கலி:போர்னியா தேர்தல் குறியீடு §§2170 - 2173)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டி(CVIG) | வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் உள்ள இடங்கள் மற்றும் வாக்குமையங்களின் பட்டியல், அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டின் மாதிரி (மாதிரி வாக்குச்சீட்டு-ஐப் பார்வையிடுக); வேட்பாளர் அறிக்கைகள்; சட்ட உரை, பக்கச் சார்பற்ற பகுப்பாய்வு மற்றும் உள்ளூர் வாக்குச்சீட்டு நடவடிக்கைகளுக்கு ஆதரவான அல்லது எதிரான வாதங்கள்; மற்றும் வாக்குச்சீட்டு மாற்று கோரிக்கை படிவம் போன்ற முக்கியமான தகவல்களைக் கொண்டுள்ள கவுண்டி தேர்தல் அதிகாரியால் தயாரிக்கப்பட்ட, மொழிபெயர்க்கப்பட்ட மற்றும் அச்சிடப்பட்ட ஒரு கையேடு. கவுண்டி வாக்காளர் தகவல் கையேட்டை (CVIG) அஞ்சலில் அனுப்புவது தேர்தலுக்கு சுமார் 40 நாட்களுக்கு முன்பு தொடங்குகிறது. முன்னர் **மாதிரி வாக்குச்சீட்டு** துண்டுப்பிரசுரம் என்று அழைக்கப்பட்டது. CVIG-யின் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகள் ஸ்பானிஷ், சீன, டாக்லாக் மற்றும் வியட்நாமிய மொழிகளில் கிடைக்கின்றன.<br>இது மாநில செயலாளர் மூலம் தயாரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ வாக்காளர் தகவல் வழிகாட்டியை போன்றது இல்லை.<br>*(கலி.ஃபோர்னியா தேர்தல் குறியீடு §§13300 - 13317)* |
| தரவிறக்கம் செய்யக்கூடிய வாக்குச்சீட்டு | வாக்காளர் பதிவாளரின் தொலைநிலையாக அணுகக்கூடிய அஞ்சல்-மூலம் வாக்களிப்பு (RAVBM) என்பது விண்ணப்பம் மூலம் பெறப்பட்ட மற்றும் வாக்களிப்பதற்காக பயன்படுத்த வாக்காளரின் வீட்டுச் சாதனத்தில் மின்னணு ரீதியாக நகலெடுக்கப்படும் வாக்குச்சீட்டு. வாக்காளர் தங்கள் வாக்கு எண்ணப்படுவதற்காக வாக்காளர் பதிவாளருக்கு தங்கள் வாக்குச்சீட்டை அச்சிட்டு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.<br>*(கலி.ஃபோர்னியா தேர்தல் குறியீடு §3007.7)* |
| நேரடி பதிவுசெய்யும் எலக்டிரானிக் (DRE) | *காலாவதியான* வாக்களிப்பு மெஷின்.<br>வாக்காளர் செயலாக்கக்கூடிய எந்திரமுறை அல்லது எலக்ட்ரோ-ஆப்டிகல் கூறுகளுடன் வழங்கப்பட்ட வாக்குச்சீட்டு காட்சி மூலம் வாக்குகளை பதிவு செய்யும் வாக்களிப்பு மெஷின்; இது கணினி நிரல் மூலம் தரவைச் செயல்படுத்துகிறது; மேலும் இது வாக்களிப்புத் தரவு மற்றும் வாக்குச்சீட்டின் படிமங்களை நினைவக கூறுகளில் பதிவுசெய்கிறது |
| முன்னதான வாக்களிப்பு | தேர்தல் தேதிக்கு முன்பே, வாக்காளர்கள் வாக்குச்சீட்டை போடக்கூடிய காலம். கலி.ஃபோர்னியாவில் "காரணம்-கூறாமல்" முன்னதாகவே வாக்களிக்கலாம் மற்றும் தேர்தல் தேதியில் வாக்களிக்க முடியாமல் போனதற்கு ஒரு வாக்காளர் காரணம் கூற வேண்டியதில்லை. கலி.ஃபோர்னியாவில், தேர்தலுக்கு 29 நாட்களுக்கு முன்பே முன்னதாக வாக்களிப்பை தொடங்கலாம். Santa Clara கவுண்ட்டியில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்காளர் பதிவாளர் அலுவலகத்தில் அல்லது தேர்தல் தேதிக்கு பத்து நாட்களுக்கு முன்னர் தொடங்கும் எந்தவொரு வாக்குமையத்திலும் வாக்களிக்கலாம்.<br>*(கலி.ஃபோர்னியாதேர்தல் குறியீடு§19209)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| தேர்தல் நிர்வாகத் திட்டம்(EAP) | கவுண்டி தேர்தல் அதிகாரியால் முன்மொழியப்பட்ட, வாக்காளர் தேர்வுச் சட்டத்தின் (VCA). கீழ் தேர்தல்களை நடத்துவது பற்றிய விரிவான திட்டம். இந்தத் திட்டத்தில் வாக்குமையங்கள் மற்றும் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்களைத் தேர்ந்தெடுப்பது, நிதிசார்ந்த பாதிப்புகள் மற்றும் பொது அவுட்ரீச் திட்டங்கள் போன்ற பல்வேறு விஷயங்கள் உள்ளன. ஒரு *வரைவுத்* திட்டம் சமூக உள்ளீட்டுடன் எழுதப்பட வேண்டும் மற்றும் பொது விசாரணை செயல்முறை மூலம் ஆராயப்பட வேண்டும். வரைவுத் திட்டம் குறித்த பொது விசாரணைகள் நடந்த பின், ஒரு *திருத்தப்பட்ட* வரைவுத் திட்டம் பொதுக் கருத்துரைக்காக வெளியிடப்படுகிறது, அதன் பிறகு ஒரு திட்டத்தை *இறுதியாக* ஏற்றுக்கொள்ளலாம். மாற்றப்பட்டு பொதுக்கருத்துக்காக வெளியிடப்படும் இறுதித் திட்டமே *திருத்தப்பட்ட இறுதித்* திட்டமாகும். தேர்தலை நடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் இறுதித் தேர்தல் நிர்வாகத் திட்டம் (EAP) மதிப்பாய்வு செய்யப்பட்டு, இரண்டு வருட பயன்பாட்டிற்குள், அதன்பிறகு ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும், மதிப்பாய்வு செய்யப்படுகிறது. EAP இன் வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் பகுதி ஒப்புதலுக்காக மாநில செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படுகிறது. திட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு கவுண்டி தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் கிடைக்கின்றன.<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு §§4000 - 4108)* |
| தேர்தல் சுழற்சி | “தேர்தல் சுழற்சி” என்பதன் அர்த்தம் அதன் பயன்பாட்டின் சூழலைப் பொறுத்து ஒன்று அல்லது இரண்டு வெவ்வேறு விஷயங்களாக இருக்கலாம்.<br>1. “தேர்தல் சுழற்சி” என்பது அரசாங்கக் குறியீடு §§ 85309 அல்லது 85500-ற்கு இணங்க, $1,000 அல்லது அதற்கு மேற்பட்ட பங்களிப்புகள் அல்லது சுயாதீன செலவினங்களைப் பற்றி ஆன்லைனில் அல்லது மின்னணு முறையில் அறிக்கையிடும் நோக்கத்திற்காக, தேர்தலுக்கு 90 நாட்களுக்கு முன்னதாக தொடங்கி தேர்தல் தேதியில் முடிவடையும் காலம். (அரசு குறியீடு பிரிவு 85204).<br>2. “தேர்தல் சுழற்சி” என்பது Cal-Access க்கான பிரச்சார பங்களிப்புகள் மற்றும் செலவினங்களைக் காணும் நோக்கத்திற்காக, ஒற்றைப்படை ஆண்டின் ஜனவரி 1 முதல் தொடங்கும் காலம். |
| தேர்தல் அதிகாரி | ஒரு தொகுதி (precinct) வாரிய உறுப்பினர், மாநிலத்தின் வாக்காளராக இருக்க வேண்டும், அவருக்கு ஆங்கில மொழியைப் படிக்கவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும், மற்றும் ஒரு வாக்குச்சாவடி அல்லது வாக்குமையத்தில் பணியாற்றுவதற்காக வாக்காளர் பதிவாளர் (ROV) நடத்துகின்ற பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும். முன்னர் வாக்கெடுப்பு தொழிலாளர்கள் என்று அழைக்கப்பட்ட தேர்தல் அதிகாரிகளை ஒரு கிளார்க் அல்லது இன்ஸ்பெக்டராக மாறுபட்ட கடமைகளுடன் நியமிக்க முடியும். தேர்தல் அதிகாரிகள் வாக்குமையங்களில் வாக்காளர்களுக்கு உதவுகிறார்கள், தகுதியைச் சரிபார்க்கிறார்கள், அதிகாரப்பூர்வ வாக்குச்ச்சீட்டுகளை வழங்குகிறார்கள், மற்றும் பிற கடமைகளைச் செய்கிறார்கள்.<br>*(தேர்தல் குறியீடு மூலம் தேர்தல் வாரியங்கள் என குறிப்பிடப்படுகிறது)* |
| தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்பு (EIMS) | Santa Clara கவுண்ட்டியின் தேர்தல் தகவல் தரவுத்தளம். |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| மின்னணு-வாக்குப் புத்தகம் (மின்-வாக்குப்புத்தகம்) | ஒரு வாக்குமையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பயன்படுத்தக்கூடிய பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் மின்னணுபட்டியலைக் கொண்ட ஓர் அமைப்பு. தேர்தலில் வாக்களிக்க தகுதியுள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் அதிகாரப்பூர்வ பட்டியல் இது; வாக்காளரின் வாக்குச்சீட்டைப் பெறும் தகுதியைச் சரிபார்க்க இது பயன்படுகிறது மற்றும் இரட்டை வாக்களிப்பைத் தடுக்க வாக்காளர் வரலாற்றை நிகழ் நேரத்தில் கைப்பற்றுகிறது. மின்னணு வாக்குப் புத்தகங்களைவாக்களிப்பு முறையுடன் இணைக்க முடியாது மற்றும் அவற்றில் தொடர்ச்சியான செயல்பாடுகளை வழங்குவதற்கான காப்புப் பிரதி ஆற்றல் இருக்க வேண்டும்.<br>1. ஒரு மின்னணு வாக்குப்புத்தகம், குறைந்தபட்சம், பின்வரும் வாக்காளர் பதிவுத்தரவுகள் அனைத்தையும் கொண்டிருக்கவேண்டும்: பெயர், முகவரி, மாவட்டம்/தொகுதி, கட்சிவிருப்பம், வாக்காளர் நிலை, வாக்காளருக்கு அஞ்சல்-மூலம் வாக்களிக்கும் வாக்குச்சீட்டு வழங்கப்பட்டதா, அஞ்சல்-மூலம் வாக்களித்த வாக்குச்சீட்டு தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பதிவுசெய்யப்பட்டதா இல்லையா, மேலும், வாக்காளரின் அடையாளம் சரிபார்க்கப்பட வேண்டுமா (கூட்டாட்சி தேர்தலில் முதல் முறையாக வாக்களிப்பவருக்கு மட்டும் பொருந்தும்).<br>*2.* ஒரு மின்னணு வாக்குப்புத்தகத்தில் பின்வரும் வாக்காளர் பதிவுத் தரவு இருக்கக்கூடாது: ஓட்டுநர் உரிம எண் அல்லது சமூக பாதுகாப்பு எண்ணுக்கான ஏதேனும் குறிப்பு.<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு §2183)* |
| அவசரநிலை வாக்குச்சீட்டு வழங்கல் | எதிர்பாராத நோய், மருத்துவ மையத்தில் அனுமதிக்கப்பட்டு இருப்பது, குறைபாடுகள் இருப்பது அல்லது விபத்துக்கள் காரணமாக காயப்பட்டுள்ளது போன்ற மருத்துவ அவசரநிலைகள் காரணமாக உடல்ரீதியாக வரமுடியாத ஒரு வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்க இந்த வகை சேவை முதன்மையாக கிடைக்கிறது. அவசரநிலை வாக்குச்சீட்டு வழங்கும் முறையை வழங்கும் 38 மாநிலங்களில் கலிஃபோர்னியாவும் ஒன்றாகும். |
| தொலைநகல் வாக்குச்சீட்டு | ஒரு குறிப்பிட்ட மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட (மாதிரி வாக்குச்சீட்டைப் பார்வையிடுக) அல்லது பார்வைகோளாறு உள்ளவர்களுக்காக பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டவை போன்ற வடிவங்களில் கிடைக்கக்கூடிய அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டின் பிரதி. வாக்காளர்கள் அஞ்சல் மூலம் ஒரு தொலைநகல் வாக்குச்சீட்டைப் பெற கோரலாம். தொலைநகல் வாக்குச்சீட்டு அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு அல்ல, மற்றும் அதை வாக்களிப்பு அமைப்பு மூலம் அட்டவணைப்படுத்த முடியாது. வாக்காளர்கள் தங்கள் அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டைப் பூர்த்திசெய்ய உதவுவதற்காக தொலைநகல் வாக்குச்சீட்டைப் பயன்படுத்தலாம். |

## பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| ஹெல்ப் அமெரிக்கா வாக்குச் சட்டம் (HAVA) | நாட்டின் வாக்களிப்பு செயல்முறைகளை நவீனமயமாக்க மற்றும் சீர்திருத்த உதவுவதற்காக 2002 இல் காங்கிரஸால் நிறைவேற்றப்பட்டது, ஹெல்ப் அமெரிக்கா வாக்குச் சட்டம் (HAVA) தேர்தல் நிர்வாகத்தின் பல முக்கிய துறைகளில் மாநிலங்கள் பின்பற்ற வேண்டிய புதிய கட்டாயமான குறைந்தபட்ச தரங்களை உருவாக்குகிறது. இந்த சட்டம் இந்த புதிய தரங்களை பூர்த்தி செய்ய, வாக்களப்பு அமைப்புகளை மாற்ற, மற்றும் தேர்தல் நிர்வாகத்தை மேம்படுத்த உதவ மாநிலங்களுக்கு நிதிகளை வழங்குகிறது. HAVA-இன்படி பின்வரும் திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை மாநிலங்கள் செயல்படுத்த வேண்டும்:<br>1. தற்காலிக வாக்களிப்பு<br>2. வாக்களிப்புத் தகவல்<br>3. புதுப்பிக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட வாக்கு உபகரணங்கள்<br>4. மாநிலம் தழுவிய வாக்காளர் பதிவு தரவுத்தளங்கள்<br>5. வாக்காளர் அடையாள நடைமுறைகள்<br>6. நிர்வாக புகார் நடைமுறைகள் |
| செயலில் இல்லாத வாக்காளர் | கவுண்ட்டி பின்வருவதை பெற்றிருந்தால் ஒரு வாக்காளர் செயலில் இல்லாததாக கருதப்படலாம்: அதே கவுண்ட்டிக்குள் முன்னோக்கி அனுப்பும் முகவரி இல்லாமல் திரும்பி வந்த ரெசிடென்சி உறுதிப்படுத்தல் அஞ்சல் அல்லது அமெரிக்கா அஞ்சல் சேவை தேசிய முகவரி மாற்ற (NCOA) தரவுத்தளத்தின் மூலம் பெறப்பட்ட தகவல் வாக்காளர் கவுண்ட்டியை விட்டு வெளியில் நகர்ந்துவிட்டதை குறிக்கிறது. இந்த வாக்காளர், வாக்காளர் பட்டியலில் இருப்பார் ஆனால் எந்தவொரு வாக்களிப்புப் பொருட்களையும் பெறமாட்டார். மேலும், தொடர்ச்சியாக இரண்டு கூட்டாட்சி பொதுத்தேர்தல்களில் வாக்களிக்காத செயலில் இல்லாத வாக்காளர்கள் ரத்துசெய்யப்படுவார்கள். ஒரு செயலில் இல்லாத வாக்காளர் முகவரி உறுதிப்படுத்தல் அட்டைக்கு பதிலளிப்பதற்காக, அதே முகவரியைக் குறிக்கும் மனுவில் கையெழுத்திட்டு அல்லது புதிய **வாக்காளர் பதிவு விண்ணப்பத்தை** பூர்த்தி செய்வதன் மூலம் வாக்களிக்க மீண்டும் தகுதிபெறுவார். |
| மொழி அணுகல் ஆலோசனைக் குழு (LAAC) | வாக்காளர் பதிவாளருக்கு (ROV) குறைவான ஆங்கில திறமையுள்ள வாக்காளர்களுக்கு தேர்தல் செயல்முறையை அணுகுவது தொடர்பான விஷயங்களில் ஆலோசனை வழங்குவதற்காக, மொழி அணுகல் ஆலோசனைக்குழு (LAAC) அமைக்கப்பட்டது. இந்தக் குழுயில் உள்ளவர்கள் **மொழி சிறுபான்மை சமூகங்களின்** பிரதிநிதிகளாக இருப்பார்கள் மற்றும் அவர்கள் மொழி அணுகலில் அனுபவரீதியாக சாதித்தவர்களாக, எளிய மொழிமுறைகளைப் பயன்படுத்தி வாக்காளர்களுக்கு தேர்தல் பொருட்களை வழங்க அல்லது வாக்காளர்களை அணுகி புரியும் வகையில் அவர்களுக்கு விளக்கும் வேறு எளிதானமுறை அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் மற்றும்/அல்லது அவர் நகரத் தேர்தல் அதிகாரியாக அல்லது அவரது பிரதிநிதியாக இருக்க வேண்டும் ஆலோசனை வழங்குபவர்களாக பணியாற்றும் குழுயின் பரிந்துரைகளை ROV ஆலோசித்து மற்றும் அவற்றை கருதுவார்.<br>*(கலி∴போர்னியா தேர்தல் குறியீடு §4005)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| மொழி சிறுபான்மை சமூகம் | கூட்டாட்சி வாக்குரிமைச் சட்டத்தின் கீழ் சேவை செய்ய தேவைப்படும் ஒரு மொழியைப் பேசும் மக்களின் குழு. **வாக்காளரின் தேர்வுச் சட்டம்** (VCA) தொடர்பான சட்டத்தில் முழுவதுமாக மொழி சிறுபான்மை சமூகங்கள் தொடர்பான பொருட்கள், வாக்களிப்பு உதவி மற்றும் பிற நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>*(வாக்களிப்பு உரிமைச் சட்டத்தின் மொழி சிறுபான்மை ஏற்பாடுகள்)* |
| அஞ்சல் வாக்குச்சீட்டு தொகுதி | **வாக்குச்சாவடி மாதிரியின்** கீழ், தேர்தலுக்கு 88 நாட்களுக்கு முன்னர், 250 அல்லது அதற்கும் குறைவான நபர்களே வாக்களிக்க பதிவுசெய்துள்ள தொகுதியை, "அஞ்சல்வாக்குச் சீட்டு தொகுதியாக" ஒதுக்கலாம், மற்றும் தேர்தல் அதிகாரி ஒவ்வொரு வாக்காளருக்கும் **அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்குச்சீட்டை** விண்ணப்பிக்க தேவையில்லாமலே வழங்கலாம். |
| கட்டுப்படுத்த உதவும் சாதனம் | வாக்களிப்பதில் உள்ள தடைகளை குறைக்க வாக்களிக்கும் இடத்திற்கு செல்வதற்கான அணுகலை மேம்படுத்த பயன்படும் பொருட்கள் மற்றும் சப்ளைகள். தேவைப்படக்கூடிய உபகரணங்கள்: கூடுதல் அல்லது தற்காலிக விளக்குகள்; நிற்க முடியாத மக்களுக்காக கூடுதல் நாற்காலிகள்; அங்கு வர வழியைக் காட்டும் அடையாளக்குறிகள்; அடைப்புகளை மறைக்க அல்லது வாயில்களைச் சரியாக்க ஆப்புகள், வளைவுகள் அல்லது ரப்பர் பாய்கள்; கதவுகளைத் திறந்தே வைக்க கதவுத்தடுப்பிகள்; குறைபாடுள்ளோர் அணுகக்கூடிய பார்க்கிங்கை குறிக்க ஆரஞ்சு கூம்புகள்; மற்றும் முடியாதவர்களுக்காக வீதியோர (curbside) வாக்களிப்பு வசதியை வழங்குவதற்கான அறிவிப்பு அமைப்பு. |
| மொபைல் வாக்குமையம் | வாக்காளர் பதிவாளரால் (ROV) நிர்வகிக்கப்படும் ஒரு மொபைல் இயக்கம், ஒரு வாக்குமையமாக அதே அளவுகோல்களைப் பூர்த்திசெய்து, மற்றும் அதே சேவைகளை வழங்குகிறது. |
| தேசிய முகவரி மாற்றம் (NCOA) | முகவரி மாறியதை அமேரிக்க அஞ்சல் சேவையில் தாக்கல் செய்த தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கிய தகவல் அல்லது தரவு.<br>*(கலி៖போர்னியா தேர்தல் குறியீடு §2222)* |
| *ஆப்டிகல் ஸ்கேனர்* | *காலாவதியான* **வாக்களிப்பு மெஷின்**.<br>நீங்கள் வாக்குச்சீட்டில் இட்டிருக்கும் குறிகளை ஆப்டிகல் முறையில் ஸ்கேன் செய்து வாக்குச்சீட்டை செருகும்போதே மின்னணு முறையில் வாக்குகளை எண்ணும் காகித-அடிப்படையிலான வாக்களிப்பு மெஷின் |
| *வாக்கெடுப்பு தொழிலாளர்* | *காலாவதியான சொல்லியல்.*<br>***தேர்தல் அதிகாரியை****ப் பார்வையிடவும்* |
| *வாக்குச்சாவடி மாதிரி* | *தற்போதைய மாதிரி ROV இதிலிருந்து மாறுகிறார்*<br>**கலி៖போர்னியா தேர்தல் குறியீட்டின்** பொது ஏற்பாடுகளின் கீழ் நடைபெறும் தேர்தல்களின் வழிமுறை மற்றும் நிர்வாகத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல். குறிப்பாக 1,000க்கும் அதிகமான வாக்காளர்கள் இல்லாத தொகுதிகளில் "சுற்றுப்புறத்தின்-அடிப்படையில்" ஒதுக்கப்பட்ட வாக்குச் சாவடிகளைப் பெரிதும் பயன்படுத்துகிறது மற்றும் அஞ்சலில் வாக்குச்சீட்டைப் பெறக் கோரும் வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பு அமைப்பும் கூடுதலாக வழங்கப்படுகிறது. |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| நேர்மறை சுத்தமாக்கம் | செயலில் இல்லாத அல்லது ரத்து செய்யப்பட்ட கோப்பிற்கு நகர்த்தப்படுவதைத் தடுக்க வாக்காளர் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு நடைமுறை, செயலில் உள்ள வாக்காளராக இருக்க விரும்புவதைக் குறிக்கும் அஞ்சலட்டையை திருப்பி அனுப்புவது போன்றவை.<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு §§2220 & 2191)* |
| தொகுதி | கலிஃபோர்னியா தேர்தல் குறியீட்டின் 12வது பிரிவின் அத்தியாயம் 3-ற்கு இணங்க (§12200-லிருந்து தொடங்கி) வாக்காளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கவுண்ட்டிக்குள் அல்லது அரசியல் அதிகார எல்லைக்குள் உள்ள ஒரு புவியியல் பகுதி. “வாக்குச் சாவடி மாதிரி” தேர்தலில், ஒரே தொகுதியில் உள்ள அனைத்து வாக்காளர்களும் ஒரே வாக்குச்சாவடிக்கு ஒதுக்கப்படுகிறார்கள். “வாக்களிப்பு மைய மாதிரி” தேர்தலில், வாக்காளர்கள் கவுண்ட்டியில் எந்த தொகுதியில் இருந்தாலும், அவர்களால் கவுண்ட்டிக்குள் உள்ள எந்தவாக்கு மையத்திலும் வாக்களிக்க முடியும் ROV தற்போது “வாக்குச் சாவடி மாதிரியில்” இருந்து “வாக்களிப்பு மைய மாதிரி”க்கு மாறிக்கொண்டிருக்கிறது. |
| தொகுதி வாரியம் | கலிஃபோர்னியா தேர்தல் குறியீட்டால் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட சொல். Santa Clara கவுண்ட்டியைப் பொறுத்தவரை, எந்த தேர்தலிலும் ஒவ்வொரு தொகுதியிலும் தேர்தல் அதிகாரிகளாக பணியாற்ற நியமிக்கப்பட்ட நபர்களே அந்த தொகுதி மற்றும் வாக்குச்சாவடிக்கான தொகுதி வாரியத்தில் இருப்பார்கள். ஆங்கில மொழியைப் படிக்கவோ எழுதவோ முடியாத ஒருவருக்கு எந்தவொரு தொகுதி வாரியத்தின் உறுப்பினராகவும் செயல்படும் தகுதி கிடையாது தேர்தல் தொகுதிஅளவின் அடிப்படையில் தேர்தல்அதிகாரி மூலம் தொகுதி வாரியத்தின் கூட்டமைவு தீர்மானிக்கப்படும். தொகுதி வாரியத்தில் குறைந்தபட்சம் ஒரு இன்ஸ்பெக்டர் மற்றும் இரண்டு கிளார்க்குகள் இருக்க வேண்டும்.<br>*(பார்க்கவும் தேர்தல் அதிகாரியை)* |
| தேர்தலுக்கு முந்தைய அறிக்கைகள் | ஒரு கட்டுப்படுத்தப்பட்ட குழுவில் உள்ள வேட்பாளர்கள் அல்லது அலுவலக பதவி வகிப்பவரிடம் இருந்து அல்லது ஒரு காலண்டர் ஆண்டில் அலுவலக பதவியில் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது அலுவலக பதவியில் இருப்பதன் (FPPC படிவம் 460) தொடர்பாக, ஒரு காலண்டர் ஆண்டில் $2,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய அல்லது செலவழித்த வேட்பாளர்களிடம் இருந்து இந்த அறிக்கைகள் தேவைப்படுகின்றன, தேர்தலுக்கு-முந்தைய முதல் அறிக்கைகள் தேர்தலுக்கு 40 நாட்களுக்கு முன்பே தாக்கல் செய்யப்பட வேண்டும் (தேர்தலுக்கு 45 நாட்களுக்கு முன்பு முடிவடையும் காலத்திற்கு). தேர்தலுக்கு-முந்தைய இரண்டாவது அறிக்கைகள் தேர்தலுக்கு 12 நாட்களுக்கு முன்பே தாக்கல் செய்யப்பட வேண்டும் (தேர்தலுக்கு 17நாட்களுக்கு முன்பு முடிவடையும் காலத்திற்கு).<br>*(கலிஃபோர்னியா அரசு குறியீடு §§84200.5, 84200.7,& 84200.8)* |
| தற்காலிக வாக்குச்சீட்டு | வாக்களிக்கும் தகுதியை உடனடியாக தீர்மானிக்க முடியாதவராக அல்லது நிபந்தனை வாக்காளராக உள்ள வாக்காளருக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல். இந்த வாக்குச்சீட்டு “தற்காலிகமாக” நிறைவுசெய்யப்பட்டு, இளஞ்சிவப்பு உறை ஒன்றில் சீல் செய்யப்பட்டு, திறந்து எண்ணப்படுவதற்கு முன்பு வாக்காளர் பதிவாளர் (ROV) அலுவலகத்தில் சரிபார்க்கப்படுகிறது.<br>*(கலிஃபோர்னியாதேர்தல் குறியீடு§§4005 & 4310)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| பொது கருத்துரை காலம் | வரைவு, திருத்தப்பட்ட வரைவு, இறுதியான, மற்றும் தேவைப்பட்டால், திருத்தப்பட்ட இறுதித் தேர்தல் நிர்வாகத் திட்டம் (EAP) குறித்து கருத்துரை தெரிவிக்க பொதுமக்களுக்கு சட்டரீதியாக வழங்கப்படும் பதினான்கு நாள் காலக்கெடு. |
| பொது ஆலோசனைக் கூட்டம் | தேர்தல் நிர்வாகத் திட்டத்தை (EAP) உருவாக்க, பொதுமக்களின் உள்ளீட்டைப் பெறுவதற்காக வாக்காளர் பதிவாளர் மூலம் சட்டப்பூர்வமாகக் கவனிக்கப்பட்டு,வெளியிடப்பட்டு மற்றும் நடத்தப்படும் பொது கூட்டங்கள் |
| பொது விசாரணை | திட்டமிடப்பட்ட அரசாங்க நடவடிக்கை குறித்த உண்மைகளை பொதுமக்கள் கேட்டு, அது குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற ஓர் அதிகாரப்பூர்வகூட்டம். |
| பொது சேவை அறிவிப்பு (PSA) | ஒரு சமூகப் பிரச்சினையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மற்றும் பொதுமக்களின் மனப்பான்மை மற்றும் நடத்தை ஆகியவற்றை மாற்றுவதற்கான நோக்கத்துடன், பொது நலனில் கட்டணம் இன்றி பரப்பப்படும் ஒரு செய்தி. |
| வாக்காளர் பதிவாளர் (ROV) | Santa Clara கவுண்ட்டியில் வாக்காளர் பதிவு மற்றும் தேர்தல்களை நிர்வகிக்கும் பொறுப்புள்ள ஒரு துறை. |
| தொலைநிலையிலிருந்து அணுகக்கூடிய அஞ்சல்-மூலம்வாக்களிப்பு (RAVBM) | குறைபாடுள்ளவர்களாக உள்ள அல்லது இராணுவ அல்லது வெளிநாட்டு வாக்காளருக்காக மின்னணு அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்குச்சீட்டை குறிக்கும் ஒரே நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் ஓர் அமைப்பு மற்றும் அதன் மென்பொருள், அவர்கள் காகிதத்தில் அளித்த வாக்கின் பதிவை தேர்தல்அதிகாரியிடம் சமர்ப்பிப்பதற்காக அச்சிடுவார்கள். தொலைநிலையிலிருந்து அணுகக்கூடிய அஞ்சல்-மூலம் வாக்களிப்பு அமைப்பானது, தொலைநிலையாக அணுகக்கூடிய' அஞ்சல் மூலம் வாக்களித்தல்' அமைப்பானது ஒருபோதும் வாக்களிக்கும் அமைப்புடன் எப்போதும் இணைக்கப்பட்டிருக்காது.<br>*(கலி.:போர்னியாதேர்தல் குறியீடு §3016.5)* |
| மாற்று வாக்குச்சீட்டு | பின்வரும் எந்தச் சூழ்நிலையிலும் வாக்காளருக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டு: வாக்குச்சீட்டு கிடைக்கவில்லை, தொலைந்துவிட்டது, ஒரு பிழையுடன் குறிக்கப்பட்டுள்ளது, அல்லது வேறு மொழி அல்லது வடிவத்தில் கோரப்பட்டது. வாக்காளருக்கு இரண்டாவது அல்லது மாற்று வாக்குச்சீட்டை வழங்கியவுடனே, வழங்கப்பட்ட முதல் வாக்குச்சீட்டு தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்பில் (EIMS) ரத்து செய்யப்படுகிறது, இது இரட்டை வாக்களிப்பைத் தடுக்கிறது<br>*(கலி.:போர்னியா தேர்தல் குறியீடு §4005)* |
| ரோஸ்டர் குறிகாட்டி | தேர்தலில் வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர்களின் அதிகாரப்பூர்வ பட்டியல், இது காகித அல்லது மின்னணு வடிவத்தில் இருக்கலாம். தேர்தலில் ஒரு முறை வாக்களித்து வாக்காளரால் கையெழுத்திடப்பட்ட அல்லது தேர்தல் அதிகாரியால் குறிக்கப்பட்ட வாக்காளர்களின் அதிகாரப்பூர்வ குறிகாட்டியாக இந்த ரோஸ்டர் இருக்கும். *இதுவும்* வாக்காளர் குறிகாட்டியும் சமமானதில்லை<br>*(கலி.:போர்னியா தேர்தல் குறியீடு §14109)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| மாதிரி வாக்குச்சீட்டு | ஒவ்வொரு தேர்தலுக்காகவும் தயாரிக்கப்பட்ட கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டியின் (CVIG) உள்ளே இருக்கும். மாநில சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட வேண்டிய மாதிரி வாக்குச்சீட்டு என்பது பெருமளவில் அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டின் நகலாக உள்ளது; இருப்பினும், அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டுடன் ஒப்பிடுகையில், மாதிரி வாக்குச்சீட்டானது அதே அளவிலோ அல்லது அதே தாளிலோ அச்சிடப்படவில்லை, மேலும் கூடுதல் இடைவெளியைக் கொண்டுள்ளது, இவை அனைத்தும் வாக்கு அட்டவணைப்படுத்தும் அமைப்பால் அதை படிக்க முடியாததாக செய்கின்றன. மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகள் Santa Clara கவுண்ட்டியில் பின்வரும் மொழிகளில் கிடைக்கின்றன: ஸ்பானிஷ், சீன, டாக்லாக் மற்றும் வியட்நாமிய.<br>*(கலி:ஃபோர்னியா தேர்தல் குறியீடு §13303)* |
| பாதுகாப்பான வாக்குச்சீட்டு கன்டெய்னர் / பரிமாற்ற சாதனம் | பூட்டக்கூடிய மற்றும் பாதுகாப்பான கொள்கலம் ஒரு டிராப்-பாக்ஸ் உள்ளே வைக்கப்படுகிறது அல்லது தனித்து நிற்கும் கொள்கலமாக இருக்கிறது. ஒரு டிராப்-பாக்ஸின் உள்ளே ஒரு பாதுகாப்பான வாக்குச்சீட்டு கொள்கலம் பயன்படுத்தப்பட்டால், வாக்குச்சீட்டுகள் நேரடியாக அந்த கொள்கலத்திற்குள் போடப்படும். அனைத்து டிராப்-பாக்ஸ்களுக்கும் பாதுகாப்பான வாக்குச்சீட்டு கொள்கலம் தேவையில்லை. |
| அரையிறுதி அதிகாரப்பூர்வ முடிவுகள் | வாக்குச்சீட்டுகளைச் சேகரிக்கும், செயல்படுத்தும் மற்றும் புள்ளிக்கணக்கீடு செயல் மற்றும், மாநில அல்லது மாநிலம் தழுவிய தேர்தல் விஷயத்தில், முடிவுகளைத் தேர்தல்நாள் இரவேமாநில செயலாளரிடம் அறிவிக்கும் பொது செயல்முறை. அரையிறுதி அதிகாரப்பூர்வ கேன்வாஸில் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்குச்சீட்டு மற்றும் தற்காலிக வாக்குச்சீட்டு வாக்குகளின் கூட்டல்களில் சில, அல்லது அனைத்தும் சேர்க்கப்படலாம். |
| ஊழியருடன் உள்ள டிராப்-பாக்ஸ் | டிராப்-பாக்ஸ் உள்ள இடம், நகரம் அல்லது கவுண்ட்டியில் ஊழியராக வேலை செய்யும் ஒரு நபர் அல்லது இதற்காக வைத்துக்கொள்ளப்படும் ஒரு தற்காலிக பணியாளர் அல்லது தன்னார்வலரின் நேரடி கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் ஒரு டிராப்-பாக்ஸ் அல்லது பாதுகாப்பான வாக்குச்சீட்டு கொள்கலம் இது. ஊழியருடன் உள்ள டிராப்-பாக்ஸைப் பொதுவாக 24 மணி நேரமும் பயன்படுத்த முடியாது. |
| ஊழியருடன் இல்லாத டிராப்-பாக்ஸ் | கண்காணிப்பதற்கான நேரடி நபரின் பார்வையில் இல்லாத பாதுகாப்பான டிராப்-பாக்ஸ். |
| அஞ்சல்-மூலம்-வாக்களிப்பு (VBM) | Santa Clara கவுண்ட்டியில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் தேர்தல்தேதியன்று வாக்களிக்க செல்வதற்குப் பதிலாக அஞ்சல்-மூலம்-வாக்களிப்பு மூலம்நேரத்திற்கு முன்பே வாக்களிக்கும் வாய்ப்பைவழங்குகிறது. அஞ்சல்-மூலம்-வாக்களிக்கப்படும் வாக்குச்சீட்டுகளை ROV பெறும்போது, திருப்பி அனுப்பப்பட்ட உறை மீதுள்ள கையெழுத்துகள் தொடர்புடைய வாக்காளர் பதிவு கார்டுகளில் உள்ள கையெழுத்துகளுடன் ஒப்பிடப்படுகின்றன. வாக்குச்சீட்டு பின்னர் உறையிலிருந்து பிரிக்கப்பட்டு ஒத்திசைக்கப்படும்.<br>*(கலி:ஃபோர்னியா தேர்தல் குறியீடு §4005)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| வாக்கு மையம் | இது தேர்தல்களை நடத்தவே நிறுவப்பட்ட, வாக்காளர்களுக்கு வாக்களிப்பு சேவைகளை வழங்க; அவர்களின் அஞ்சல் வாக்குச்சீட்டை போட; வாக்களிக்க பதிவுசெய்ய; அல்லது தற்காலிக, மாற்று, அல்லது அணுகக்கூடிய வாக்குச்சீட்டில் வாக்களிப்பதற்காக உள்ள ஒரு இடம். பாரம்பரிய வாக்குச்சாவடிகளை விட வாக்குமையங்களில் பெரிய அளவில் வசதிகள் இருக்கும், மற்றும் இங்கே வாக்காளர்களுக்குஉதவ கூடுதல் வாக்களிப்பு சாதனங்கள் மற்றும் கூடுதல் தேர்தல் அதிகாரிகள் இருப்பார்கள், மேலும் இவையும் வாக்குச் சாவடிகளுக்கு பொருந்தும் அதே விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும். கவுண்ட்டியின் ஒரு வாக்காளர் எந்தவொரு வாக்குமையத்திற்கும் சென்று வாக்களிக்கலாம்.<br>*(கலி៖போர்னியா தேர்தல் குறியீடு §§2170, 4005, & 4007)* |
| வாக்கு மையத்தின் மாதிரி | வாக்காளர் தேர்வுச் சட்டத்தின் கீழ் தேர்தல்கள் நடத்தப்படும் விதத்தின் நிர்வாக அமைப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல். பெரும்பாலும், இது அனைத்துமே அஞ்சல்-மூலம்-வாக்களிப்பாக உள்ள தேர்தலும், பெரிய இடமாக உள்ள வாக்குச்சாவடிகளைப் பயன்படுத்தும் வாக்கு மையங்கள் என்பதும், கூட்டாக இருப்பது<br>*(கலி៖போர்னியா தேர்தல் குறியீடு §14428)* |
| VoteCal | *முன்பு CalVoter என்று அழைக்கப்பட்டது.*<br>ஹெல்ப் அமெரிக்கா வாக்குச் சட்டம் (HAVA) மூலம் கட்டாயமாக்கப்பட்ட VoteCal என்பது மாநில செயலாளர் மூலம் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் மையப்படுத்தப்பட்ட மாநிலம் தழுவியவாக்காளர் பதிவு தரவுத்தளமாகும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கவுண்ட்டியும் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது, மேலும் நகல் பதிவுகள் அல்லது வாக்காளர்களை வாக்களிப்பதைத் கடுக்கும் எந்தவொரு புதுப்பித்தல்களையும் சரிபார்க்க இதைப் பயன்படுத்தலாம். VoteCal கவுண்டியின் தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்பு (EIMS) மற்றும் திருத்தங்கள் மற்றும் மறுவாழ்வுத் துறை, பொது சுகாதாரத் துறை மற்றும் மோட்டார் வாகனத் துறைபோன்ற பிற மாநில அமைப்புகளுடன் சேர்ந்து செயலாற்றி மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்கிறது.<br>*(2002-இன் ஹெல்ப் அமெரிக்கா வாக்குச் சட்டம்)* |
| வாக்காளர் செயல் கோரிக்கை படிவம் (VARF) | பின்வருவதை செய்ய "பதிவுசெய்யப்பட்ட" Santa Clara கவுண்ட்டி வாக்காளர்களுக்கான படிவம்:<br>1. முகவரி அல்லது அஞ்சல் முகவரியை மாற்ற (Santa Clara கவுண்ட்டிக்குள் நகர்ந்தால்)<br>2. மொழி விருப்பத்தை மாற்ற (ஆங்கிலம், சீன, ஸ்பானிஷ், டகலாக், வியட்நாமிய, இந்தி, ஜப்பானிய, கெமர் மற்றும் கொரிய)<br>3. ៖பேக்ஸ் மூலம் வாக்குச் செலுத்தக் கோருதல்<br>4. நிரந்தர அஞ்சல் மூலம் வாக்கு செலுத்தும் நிலையை மாற்றுதல்<br>5. பதிவுத் தகவல்களில் உள்ள எழுத்துப்பிழைகள் அல்லது பிற பிழைகளைச் சரிசெய்தல்<br>6. அஞ்சல் மூலம் கவுண்ட்டி வாக்காளர் தகவல் கையேட்டைப் பெறுவதில் இருந்துவிலகுதல்<br>7. வாக்காளர் பதிவை நீக்குதல்<br>8. குடும்பத்தில் அல்லது உறவுகளில் மரணமடைந்தவரின் வாக்காளர் பதிவை ரத்துசெய்தல்<br>*(கலி៖போர்னியா தேர்தல் குறியீடு §§2150 - 2168)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் கூட்டணி (VEOC) | அவுட்ரீச் மற்றும் ஈடுபடுத்துவதன் மூலம் கவுண்ட்டியில் கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவது மற்றும் வாக்காளர் பங்களிப்பை அதிகரிப்பது தொடர்பாக, வாக்காளர் பதிவாளருக்கு (ROV) ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை வழங்குகிறது. கூட்டணியில் இருக்கும் தனிநபர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டங்களில் அனுபவரீதியாக சாதித்தவர்களாக அல்லது நகரத் தேர்தல்அதிகாரியாக இருப்பார்கள். ROVக்கு ஆலோசனை தரும் நிலையில் கூட்டணிசெயல்படும். |
| வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டம் | இது கவுண்ட்டியின் உள்ளூரின் தேர்தல் நிர்வாகத் திட்டத்தில் (EAP) சேர்க்கப்படதேவை மற்றும் இது மாநில செயலாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டம், வாக்காளர் தேர்வுச் சட்டத்தில் (VCA) கல்வி மற்றும் அவுட்ரீச் தொடர்பாக குறிப்பிடப்பட்ட விதிகளை கவுண்ட்டி தேர்தல் அதிகாரி பின்பற்றும் விதத்தை விவரிக்க வேண்டும், இதில் புதிய வாக்களிப்பு முறை மற்றும் அதற்காக எழுதப்பட்ட ஆவணங்கள் மற்றும் தொலைபேசி மூலம் உதவி கிடைப்பது பற்றி தெரியப்படுத்த ஊடகங்கள், சமூக ஊடகங்கள், பொதுக் கல்வி கூட்டங்கள் மற்றும் நேரடிவாக்காளர் தொடர்புகள் ஆகியவற்றை பயன்படுத்துவதும் அடங்கும். |
| வாக்காளர் கல்வி பட்டறை | தேர்தல் நிர்வகிக்கப்படும் புதிய வழி குறித்து வாக்காளர்களுக்கு தெரிவிக்கும் இலக்குடன், கவுண்ட்டி தேர்தல் அதிகாரி குறைந்தது இரண்டு வாக்காளர் கல்விபட்டறைகளை நடத்த வேண்டும். குறிப்பிட்ட இலக்கு பட்டறைகளில் இருமொழி வாக்காளர் கல்வி பட்டறைகள் சேர்க்கப்படவேண்டும் (கவுண்ட்டியில் தேவைப்படும் ஒவ்வொரு மொழிக்கும் குறைந்தது ஒன்று) மற்றும் குறைபாடுள்ளவர்களாக உள்ளதகுதியான வாக்காளர்களின் அணுகல் மற்றும் பங்கேற்பை அதிகரிக்க தேவைப்படும்பட்டறைகளும் இருக்க வேண்டும். |
| வாக்காளர் அவுட்ரீச் | வாக்களிப்பு செயல்முறை பற்றி தனிப்பட்ட முறையில் அல்லது மின்னணு முறையில் தகவல்களை தீவிரமாக பரப்புதல். |
| வாக்காளர் பதிவுவிண்ணப்பம் | *பார்க்கவும் பதிவுக்கானபிரமாணப் பத்திரம்*<br>*(கலி.:போர்னியா தேர்தல் குறியீடு §2188)* |
| வாக்காளர் பதிவு கார்டு | *பார்க்கவும் பதிவுக்கான பிரமாணப் பத்திரம்*<br>*(கலி.:போர்னியா தேர்தல் குறியீடு§2158)* |
| வாக்காளர் பதிவு படிவம் | *பார்க்கவும் பதிவுக்கான பிரமாணப் பத்திரம்*<br>*(கலி.:போர்னியா தேர்தல் குறியீடு §2162)* |
| வாக்காளர் ரெசிடென்சி உறுதிப்படுத்தல் கார்டு | பர்ஸ்ட்-கிளாஸ் முன்னனுப்பக்கூடிய அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட வாக்காளர் ரெசிடென்சி உறுதிப்படுத்தல் கார்டு (8D2 கார்டு), இது வாக்காளர் முகவரியை உறுதிப்படுத்தப் பயன்படுகிறது. இந்த கார்டு வாக்காளர் பதிவு கோப்பை நிர்வகிக்கவும், வீடு மாறிய வாக்காளர்களின் முகவரிகளை உறுதிப்படுத்தவும் சரிசெய்யவும் பயன்படுத்தப்படுகிறது.<br>*(கலி.:போர்னியா தேர்தல் குறியீடு §§2191, 2220, & 2240 - 2231)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| வாக்காளர் சரிபார்ப்புஅமைப்பு | வாக்கு மையத்தில் வாக்காளர் பதிவு தரவை உடனடியாக அணுக கவுண்ட்டி தேர்தல் அதிகாரிகளுக்கான மின்னணு அமைப்பு.<br>*பார்க்கவும் எல்க்டிரானிக் போல்புக்.*<br>*(கலி∴போர்னியா தேர்தல் குறியீடு §359.2)* |
| வாக்காளர் தேர்வு சட்டம் (VCA) | ஒரு புதிய கலி∴போர்னியா சட்டம் (SB450), செனேட்டர் பென் ஆலன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 2016இல் நிறைவேற்றப்பட்டது, இது ஒரு புதிய மாதிரியின் கீழ் கவுண்ட்டிகள் தேர்தல்களை நடத்த அனுமதிப்பதன் மூலம் வாக்காளர்களுக்கு அதிக நெகிழ்வுத்தன்மையையும் வசதியையும் வழங்கி தேர்தல்களை நவீனமாக்கிவிடும்இந்த புதிய தேர்தல் மாதிரியானது வாக்காளர்களை எவ்வாறு, எப்போது, எங்குவாக்களிக்க வேண்டும் என்பதை தேர்வு செய்ய அனுமதிப்பதற்காக செய்வது:<br>1. ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு வாக்குச்சீட்டை அனுப்புகிறது<br>2. நேரில்-வந்து முன்னதாகவே வாக்களிப்பதை விரிவாக்குகிறது<br>3. வாக்காளர்களை தங்கள் கவுண்ட்டிக்குள் உள்ள எந்த வாக்கு மையத்திலும் வாக்களிக்க அனுமதிக்கிறது<br>இந்தச் சட்டம் சில சூழ்நிலைகளில், கவுண்ட்டிகளை அஞ்சல் மூலம் தேர்தல்களை நடத்த அனுமதிப்பதன் மூலம் வாக்காளர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்தை கொண்டுள்ளது.<br>*(கலி∴போர்னியா தேர்தல் குறியீடு §§3017, 15320, & 4005 - 4008)* |
| வாக்குமுறை அணுகல் ஆலோசனைக் குழு (VAAC) | மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு தேர்தலில் அணுகலை மேம்படுத்துவது தொடர்பான விஷயங்களில் வாக்காளர் பதிவாளருக்கு(ROV) ஆலோசனை வழங்குவதற்காக வாக்குமுறைஅணுகல் ஆலோசனைக் குழு (VAAC) நிறுவப்பட்டது,மேலும் இந்த குழு வாக்களிப்பு மையங்களை அமைக்க மற்றும் குறைபாடுள்ளவர்களாக, பார்வை குறைபாடுள்ள, மற்றும் செவிடாக, அல்லதுசெவிட்டுத்தன்மை உள்ள தனிநபர் வாக்காளர்களுக்கானவாக்காளர் சேவைகளையும்அணுகலையும் மேம்படுத்துவதற்காகவும் பரிந்துரைப்பார்கள். இந்த குழுயில்குறைபாடுள்ளவர்களாக உள்ள வாக்காளர்கள் இருப்பார்கள், அவர்கள்மாற்றுத்திறனாளிவாக்காளர்களுக்கானஅணுகல் தேவைகளில் அனுபவரீதியாகசாதித்தவர்களாக அல்லது நகரத் தேர்தல் அதிகாரியாக இருப்பார்கள். ஆலோசனைதரும் நிலையில் குழு செயல்படும். |
| வாக்களிப்பு சாதனம் | வாக்குச் சீட்டு கார்டு அல்லது கார்டுகளுடன் இணைந்து வாக்குச்சீட்டில் குறிக்க, பஞ்செய்ய அல்லது ஸ்லாட்டிங் மூலம் வாக்காளரின் தேர்வைக் குறிக்க பயன்படுத்தப்படும்எந்தவொருசாதனமும்.<br>*(கலி∴போர்னியா தேர்தல் குறியீடுபிரிவு 19)* |
| வாக்களிப்பு மெஷின் | தொகுதியின்ஆப்டிகல் ஸ்கேனர் மற்றும் நேரடியாக ரிகார்ட் செய்யும் எலக்டிரானிக் (DRE) வாக்களிப்பு முறை உட்பட, ஆனால் இவை மட்டுமல்லாமல், வாக்காளர் தனது வாக்குகளை உள்ளிடக்கூடிய எந்தவொரு மின்னணுசாதனமும், மின்னணு ரீதியாக அட்டவணைப்படுத்தி மற்றும் காகிதத்தில் அச்சடித்தோ அல்லது மற்ற உறுதியான, மனிதர்களால் படிக்கக்கூடிய ரிகார்டுகளை வழங்குகிறது, மேலும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைக்கு ஆதரவாகவும் அல்லது அதற்கு எதிராகவும் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை வழங்குகிறது.<br>*(கலி∴போர்னியா தேர்தல் குறியீடுபிரிவு 19)* |

# பின்னிணைப்பு A – விதிமுறைகள் மற்றும் சுருக்கப் பெயர்களின் சொற்களஞ்சியம்

| சொல்/சுருக்கவடிவம் | அர்த்தம் |
|---|---|
| வாக்களிப்பு அமைப்பு | வாக்குச்சீட்டை போட, வாக்குகளை அட்டவணைப்படுத்த அல்லது இரண்டிற்காகவும் பயன்படுத்தப்படும் ஒரு மெக்கானிக்கல், எலக்ட்ரோமெக்கானிக்கல், அல்லது எலக்ட்ரானிக் அமைப்பு மற்றும் அதன் மென்பொருள். "வாக்களிப்பு அமைப்பில்" **தொலைநிலையிலிருந்துஅணுகக்கூடிய அஞ்சல்-மூலம்-வாக்களிப்பு** அமைப்பு சேர்க்கப்படவில்லை.<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடுபிரிவு 19)* |
| வாக்காளர் மூலம் சரிபார்க்கப்பட்ட காகித தணிக்கை சோதனை (VVPAT) | ஜனவரி 1, 2006க்குப் பிறகு பயன்படுத்தப்படும் **அனைத்து நேரடியாகரிகார்ட்செய்யும் எலக்டிரானிக்**(DRE) வாக்களிப்பு மெஷின்களும், அணுகக்கூடிய வாக்காளர் மூலம் சரிபார்க்கப்பட்ட காகித தணிக்கை சோதனை முறையை கொண்டிருக்கவேண்டும். எலக்ட்ரானிக் வாக்களிப்புமெஷினில் வாக்களிக்கும் அனைத்து வாக்காளர்களும் தங்கள் வாக்குச்சீட்டை இறுதி செய்து போடுவதற்கு முன்பு, இந்த அச்சிடப்பட்ட காகித ரிகார்டில் தங்கள் வாக்குச் சீட்டுகளை ஆய்வு செய்து சரிபார்க்கவேண்டும். வாக்குச்சீட்டை போட்டவுடன், ரிகார்ட் செய்யப்பட்ட வாக்குகளின் துல்லியத்தை சரிபார்க்க, தேர்தல் தணிக்கை சோதனையின் ஒரு பகுதியாக வாக்குப்பதிவின் இந்த காகிதரி கார்டும் வாக்களிப்ப மெஷினிலேயே தக்க வைக்கப்படுகிறது. கலிஃபோர்னியா தேர்தல் குறியீட்டின் படி, வாக்காளர்கள் தங்கள்வாக்கு தேர்வுகள் குறித்த அச்சிடப்பட்ட காகித ரிகார்டை பெறுவதில்லை.<br>*(கலிஃபோர்னியா தேர்தல் குறியீடு § 19250)* |
| | |